பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 06 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டில் பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**2.** இந்தியா - இங்கிலாந்து இடையேயான இருதரப்பு வர்த்தகப் பேச்சுகளில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று லண்டன் செல்கிறார்.

**3.** இந்தியா - ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலரை எட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**4.** வெனிசுலாவில் இன்று காலை 7 புள்ளி 5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

**5.** உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

4 மாநிலங்களில் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை, மின்சாரம், தொழில்துறை வழித்தடங்கள், மெட்ரோ ரயில் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து பிரதமர் ஆய்வு செய்தார்.

பிராந்திய போக்குவரத்து இணைப்பு, தொழில்துறை வளர்ச்சி, மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை உரிய தருணத்திற்குள் நிறைவு செய்வது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

திட்டப் பணிகளை தாமதமின்றி விரைவுபடுத்துமாறு அப்போது அதிகாரிகளை பிரதமர் கேட்டுக்கொண்டார்.

அதைத்தொடர்ந்து காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் முன்னேற்றம் குறித்து பிரதமர் ஆய்வு செய்தார்.

இதற்கான பணிகளில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன மின்னணு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துமாறு அவர் அறிவுறுத்தினார்.

விழிப்புணர்வு பணிகளில் தேசிய மாணவர் படை மாணவர்கள் **MyBharat** தன்னார்வலர்களை ஈடுபடுத்துமாறு அவர் அறிவுறுத்தினார்.

இணையவழிக் குற்றங்கள் தொடர்பான புகார்கள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

மின்னணு தளங்களை தவறாக பயன்படுத்துவது குறித்து கவலை தெரிவித்த பிரதமர், வங்கிகள், மின்னணு தளங்கள் உள்ளிட்டவை ஒருங்கிணைந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் **3** நாள் பயணமாக இன்று லண்டன் செல்கிறார்.

அங்கு அவர், இங்கிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. **Peter Kyle** உடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கான முந்தைய பணிகள் குறித்து அவர் விவாதிக்க உள்ளார்.

**HSBC, RolesRoyce** உள்ளிட்ட உலகளாவிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அவர் உரையாட உள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து வர்த்தக குழுமம் ஏற்பாடு செய்துள்ள வர்த்தகம் தொடர்பான அமர்விலும் திரு. பியூஷ் கோயல் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை **2030**ஆம் ஆண்டுக்குள் **100** பில்லியன் டாலரை எட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தெரிவித்துள்ள கிரம்ளின் மாளிகை செய்தித்தொடர்பாளர் திரு. **Dmitry Peskov,** இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் தற்போது **60** பில்லியன் டாலர் அளவிற்கு நடைபெற்று வருவதாக கூறினார்.

உலகில் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்றும் கிரெம்ளின் மாளிகை செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

<<<<>>>>

பத்மஸ்ரீ விருது பெற்ற இந்து மிஷன் மருத்துவமனை நிறுவனர் திரு. T.K. ஸ்ரீனிவாசனை அவரது இல்லத்தில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள அவர், மத்திய அரசின் 12 ஆண்டுகால சாதனைகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் இடம்பெற்றுள்ள தொகுப்பை தாம் வழங்கியதாக கூறியுள்ளார்.

மருத்துவ சேவையை தன்னலமற்ற சமூக பணியாக கொண்டு எண்ணற்ற மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையையும், நல்வாழ்வையும் திரு. T.K. ஸ்ரீனிவாசன் விதைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அவருடைய அர்ப்பணிப்பும், மனிதநேய பணிகளும் பாராட்டத்தக்கவை என்று திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களுக்கு இடையே நடைபெற்ற தேசிய இளையோர் நாடாளுமன்றப் போட்டியில் வெற்றி பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு இன்று பரிசு வழங்கப்படுகிறது.

புதுதில்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கும், வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் மத்திய இணையமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மேக்வால் பரிசு வழங்குகிறார்.

மண்டல ரீதியிலான போட்டிகளில் முதலிடம் பெற்ற தமிழகத்தில் மதுரையில் உள்ள பி.எம்.ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு பரிசு வழங்கப்பட உள்ளது.

<<<<>>>>

அர்மேனியா நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற அந்நாட்டுப் பிரதமர் திரு. **Nykol Tashinyan**-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், மேற்காசியாவில் அண்மையில் நிலவிய சூழ்நிலையின்போது ஈரானில் இருந்த இந்தியர்களை மீட்பதற்கு உதவி செய்ததற்காக அர்மேனிய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டதாக கூறியுள்ளார்.

இந்தியா - அர்மேனியா இடையே வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இருதரப்பு கூட்டாண்மையை மேலும்

வலுப்படுத்த தாங்கள் உறுதிபூண்டதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கடந்த ஆண்டு ஒன்றரை கோடி பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் நாடு முழுவதும் 545 பாஸ்போர்ட் சேவை மையங்கள் செயல்படுவதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 10 தபால் நிலைய பாஸ்போர்ட் சேவை மையங்கள் திறக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு மேலும் 10 சேவை மையங்கள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சிப் பொருத்தப்பட்ட ஒரு கோடியே 47 லட்சம் பாஸ்போர்ட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நடப்பாண்டு மழைப்பொழிவு இயல்பைவிட குறைவாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதால் அதற்கேற்ப வேளாண்மைப் பணிகளை

மேற்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு சத்தீஸ்கர் வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி நெல்லுக்கு பதில் பருப்பு வகைகளையும், எண்ணெய்வித்துக்களையும் பயிரிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இவற்றை பயிரிடும் குறைந்த நீர் வசதி கொண்ட வேளாண் நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்க சத்தீஸ்கர் அரசு முடிவு செய்துள்ளது.

<<<<>>>>

வெனிசுலாவில் இன்று காலை 7 புள்ளி 5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அங்குள்ள **Yaracuy** மாகாணத்தின் **Yumare** நகரில் நிகழ்ந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளி 5ஆக பதிவானது.

முன்னதாக **San Felip** நகரில் 7 புள்ளி 2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உண்டானது.

இந்த நிலநடுக்கத்தால் அந்நகரங்களில் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஜப்பானிலும் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்நாட்டின் வடக்குப் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 புள்ளி 9ஆக பதிவானது.

டோக்கியோவிலும் லேசான நிலநடுக்கம் உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Shambhavi Kshirsagar - Abhinav Shaw இணை தங்கப் பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு குழு 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இந்த இணை உலக சாதனையுடன் இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 7 தங்கம், 6 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

--------------

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rounak Chouhan, Tanvi Sharma, Santhosh Ramraj, Devika Sihag ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் Rounak Chouhan, 23-21, 21-16 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய வீரர் S.M. சுப்பிரமணியனை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் Tanvi Sharma 23-21, 21-16 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் Yvonne Li-ஐ வென்றார்.

Santhosh Ramraj, 21-15, 21-8 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் Tereza Svabikova-ஐ வென்றார்.

Devika Sihag 21-14, 21-14 என்ற செட் கணக்கில் பெரு நாட்டின் Castillo Salazar-ஐ வென்றார்.

--------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் போஸ்னியா ஹெர்சோகோவினா அணி **3-1** என்ற கோல் கணக்கில் கத்தாரையும், சுவிட்சர்லாந்து **2-1** என்ற கோல் கணக்கில் கனடாவையும் வென்றன.

மற்ற ஆட்டங்களில் மொராக்கோ **4-2** என்ற கோல் கணக்கில் ஹெய்தி அணியையும், பிரேசில் **3-0** என்ற கோல் கணக்கில் ஸ்காட்லாந்தையும் வென்றன.

-------------

மாநிலங்களுக்கு இடையேயான தடகள சாம்பியன் போட்டியின் போல்வால்ட் பிரிவில் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த தேவ்குமார் மீனா புதிய தேசிய சாதனை படைத்தார்.

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர் **5** புள்ளி நான்கு ஆறு மீட்டர் உயரம் தாண்டி இச்சாதனையைப் படைத்தார்.

--------------

ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் 1-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் லெபனானின் பெஞ்சமின் ஹசனை வென்றார்.

**<<<<The End>>>>**